முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் காரைக்கால் அம்மையார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

30.11.2018, வெள்ளிக்கிழமை

1. **ஆறுமுக யோக ஞான சக்தியே**
**அறமாக ஆற்றலாக வந்த**
**ஆறுமுக அரங்கமகா ஞானியே**
**அகிலமதில் உன் பெருமை கூறி**
2. கூறியே ஒளி சூட்சும நூலை
குறையிலா **விளம்பி தேள் திங்கள்**
**தெரியவே முன்னான்கீர் திகதி புகர்வாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 14ம் நாள் 30.11.2018, வெள்ளிக்கிழமை)**
**தேசிகனுக்கு காரைக்கால் அம்மையார் யானும்**
3. யானும் உலகோர் நலமுற உரைப்பேன்
உயர்வான அரங்கன் சீடர்கள் வழியே
ஞானயுகம் அமைய இருக்க
ஞாலமதில் தக்க காலம் கருதி
4. கருதியே வந்தடையும் மக்கள்
கந்தவேலன் சக்தி பெறுவதுடன்
ஆறுமுகன் அருள் துணை கூடி
அகிலமதில் ஞானியாகும் வரம்
5. வரமுடன் நல்வாய்ப்பு பெறுவர்
வல்லமை கூடி நிலை உயருவர்
தரணியெங்கும் தரும சேவையாகி
தவராசன் ஆற்றல் பரவி வர
6. வருகவே முருகா அரங்கா என
வந்திணையும் மக்கள் எல்லாம்
வறுமை கஷ்டங்கள் விலகி
வளம் பெறுவதுடன் இனிதே
7. இனிதே வாழும் காலமே
இல்லறமுடன் நல்துறவும்
கனிவுபட செயல் வேகமும்
கண்ணியமான வாழ்வும் வளமும்
8. வளமும் கண்டு சிறப்பர்
வாழ்வாதார தேவை பூர்த்திபட
பலமான உறவும் சுற்றமும்
பணிவான சம்பத்து பலமும் கண்டு
9. கண்டு சிறப்பு பல அடைவர்
கலி இடரை வென்று திளைப்பர்
தொண்டு வழி கிட்டும் வரத்தை
தேசிகன் வழியே அடையலாம் என
10. என ஆறுமுகனார் சூட்சும சக்திபட
ஏழாம் படை வீடு படைத்து இயக்க
ஞான வழி வரும் எல்லா மக்களும்
நம்பி வர ஞான சித்தியுடன்

11. சித்திமிகு பிறவா பேற்றை
சேவை கொண்டே மக்களடைவர்
உத்தமமான ஞான குருவரங்கன்
உண்மை வழி உலகை தேற்றும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

## முருகப்பெருமான் துணை

**மகான் காரைக்கால் அம்மையார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

முருகப்பெருமானின் ஆறுமுக யோக ஞான சக்தியே அரங்கா, யோக ஞான சக்தியை எல்லாம் அறமாக ஆற்றலாக்கி உலகிற்கு அளித்து தருமத்தினை காக்கவே முருகப்பெருமானின் அவதாரமாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியே, அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 14ம் நாள் 30.11.2018, வெள்ளிக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே காரைக்கால் அம்மையார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் காரைக்கால் அம்மையார்.

பண்புமிக்க உயர்வான ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சீடர்களால் இவ்வுலகினில் ஞானயுகம் அமைய இருக்கின்றது. இவ்வுலகினில் அதற்கான தகுந்த காலத்தினை உருவாக்கி ஞானயுகம் அமைத்துக் கொண்டிருக்கும் இந்த தருணத்தில் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை வந்தடைந்து யுகமாற்றப் பணிகளிலே பங்கு பெறுகின்ற மக்களெல்லாம் முருகப்பெருமானின் சக்தியை பெறுவதுடன் முருகப்பெருமானின் அருள் துணையும் கிடைக்கப் பெற்று இவ்வுலகினில் ஞானியாக ஆகின்ற வரத்தினையும் ஞானியாகுவதற்கு உண்டான நல்ல வாய்ப்புகளையும் பெற்றிடுவார்கள். அவர்கள் வல்லமைகளையும் பெற்று உயர்ந்த நிலையையும் அடைந்திடுவார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சேவைகளெல்லாம் உலகமெங்கும் தருமசேவைகளாக பரவி உலகமெங்கும் ஆறுமுக அரங்கனின் ஆற்றல் வெகு வேகமாக பரவி வருகின்றதப்பா.

உலகமெங்கும் அரங்கனின் தர்மசக்தி பரவி வருகின்ற இத்தருணத்தில் முருகப்பெருமானே அரங்கமகா தேசிகனே காத்தருள்வாய் எங்களை என்றே அரங்கனை நாடி வந்து பயபக்தியுடன் பணிந்து சரணடைந்து அரங்கனின் தானதருமப் பணிகளிலே தங்களையும் இணைத்துக் கொண்டு தர்மங்கள் செய்தும் தொண்டுகள் செய்தும் வருகின்றவர்கள் எல்லாம் அவரவர்க்கு உண்டான வறுமை சூழ்நிலைகள் எல்லாம் விலகிடும், கஷ்டங்கள் விலகி ஓடும். சர்வ வளமும் அவர்கள் பெறுவதுடன் வாழும் காலத்திலேயே அவர்கள் இல்லறத்திலும் சிறந்து விளங்குவதோடு இல்லறத் துறவும் மேற்கொண்டு கனிவும் தயவும் மிக்கவராய் வாழ்ந்து செயல் வேகம் உடையவராய் வாழ்வதுடன் கண்ணியமான வாழ்வினையும் வாழ்ந்து சிறப்படைவார்கள்.

வாழ்வாதார தேவைகளெல்லாம் நிறைவுடன் கிடைக்கப் பெற்று நல்ல உறவுகளையும் நல்ல சுற்றங்களையும் பெற்று பணிவான சம்பத்து பலமும் கண்டு, பலவிதமான சிறப்புகளையும் அடைந்து சிறப்படைவதோடு வெல்வதற்கரிய கலியுகத் துன்பத்தையும் வென்று சிறப்பார்கள்.

அவர்கள் செய்கின்ற அரங்கனின் தானதரும தொண்டுகளினால் அரங்கனிடமும் ஞானிகளிடத்தும் வரங்களை பெறலாம் என்பதற்காகவே முருகப்பெருமானும் அன்பர்கள் வரம் பெறும் வாய்ப்பாக முருகப்பெருமானின் சூட்சும சக்தியுடன் கூடிய சர்வசக்திமிக்க ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை அமைத்து செயல்படுத்தி வருகின்றார். ஆதலினால் ஞானம் விரும்பி ஞானவழி வருகின்ற மக்கள் எல்லாம் அரங்கனை ஞானகுருவாய், வரமளிக்கும் தெய்வமாய் நம்பி முழுமனதோடு ஓங்காரக்குடிலை நாடி வந்து தொண்டுகளில் இணைந்து செயல்பட அவர்கள் ஞானசித்தியுடன் சித்திமிக்க பிறவா பெரும்பேற்றினை மரணம் தவிர்த்த மரணமிலாப் பெருவாழ்வினை அவர்கள் செய்கின்ற தொண்டுகளினால் கிடைக்கின்ற தொண்டு பலத்தினாலும் அரங்கன் அருளும் வரங்களினாலும் பெற்றிடலாம்.

உத்தம மகா ஞானி இவ்வுலகின் ஒப்பற்ற சற்குரு ஞானகுரு அரங்கன் கூறும் உண்மை ஞானநெறியே இவ்வுலகைத் தேற்றும் வல்லமைமிக்க தூயநெறியாகும் என உலகறிய உரைக்கின்றார் மகான் காரைக்கால் அம்மையார்.

–சுபம்–